## பின்னிணைப்பு 1.

அ. 1961ம் ஆண்டில் நாணயச்சபை மேற்கொண்ட பிரதான நிர்வாக நடவடிக்கைகள்.

## அ. 1961ம் ஆண்டில் நாணயச் சபை மேற்கொண்ட பிரதான நிர்வாக நடவடிக்கைகள்

(அ) சுற்றறிக்கை இலக்கம் 12

இலங்கை மகாவங்கி,
தபாற்பெட்டி இலக்கம் 590,
கொழும்பு.
1961, தை 26ம் திகதி.

### முற்பணங்களின் மேல் மகாவங்கியின் வட்டி விகிதங்கள்

(மேற்கோள்:- நாணயவிதி அதிகாரச் சட்டத்தின் 82ம், 86ம் பிரிவுகள்.)

1. இன்று (1961, தை 26) தொடக்கம், அரசாங்கப் பிணைகளின் அடைமானத்தின் பேரில் மகாவங்கி, வர்த்தக வங்கிகளுக்கு வழங்கிய முற்பணங்களின் மேல் உள்ள ஓராண்டுக்கான வட்டி விகிதம் 4 சதமாக விளங்கும்.

2. இன்று (1961, தை 26) தொடக்கம் வழங்கு தவணை வாக்குறுதிப் பத்திரங்களின் அடைமானத்தின் பேரில் மகாவங்கி, வர்த்தக வங்கிகளுக்கு வர்த்தக, உற்பத்திக் கடன்கள் சம்பந்தமாக வழங்கிய முற்பணங்களின் மேல் உள்ள ஓராண்டுக்கான வட்டி விகிதம் 4 சதவீதமாக விளங்கும்.

3. 1960, ஆவணி 12ம் திகதி 9ம் இலக்கைச் சுற்றறிக்கையும், 1960, ஆவணி 27ம் திகதி 9/1ம் இலக்கச் சுற்றறிக்கையும் இத்தால் விலக்கப்பட்டன.

எஸ். டி. அமரசிங்க,
பிரதம கணக்காளர்,
இலங்கை மகாவங்கி.

டி. டபிள்யூ. இராஜபத்திரன,
ஆட்சியாளர்,
இலங்கை மகாவங்கி.

(ஆ) சுற்றறிக்கை இலக்கம் 13

இலங்கை மகாவங்கி,
தபாற் பெட்டி இலக்கம் 590,
கொழும்பு.
1961, தை 26.

**முற்பணங்களின் மேல் வர்த்தக வங்கிகளின் வட்டி விகிதங்கள்**

(மேற்கோள்:- *நாணய விதி அதிகாரச் சட்டத்தின் 103ம் பிரிவு*)

இன்று (1961, தை 26) தொடக்கம், 1960 ஆவணி 12ம் திகதி 10ம் இலக்கச் சுற்றறிக்கையும், 1960 ஆவணி 27ம் திகதி 10/1ம் இலக்கச் சுற்றறிக்கையும் விலக்கப்பட்டன.

எஸ். டி. அமரசிங்க,
*பிரதம கணக்காளர்,*
இலங்கை மகாவங்கி

டி. டபிள்யூ. இராஜபத்திரன,
*ஆட்சியாளர்,*
இலங்கை மகாவங்கி.

(இ) சுற்றறிக்கைக் கடிதம் இலக்கம் 14

இலங்கை மகாவங்கி,
த. பெ. இல: 590,
கொழும்பு 1.
1961, ஆடி 24.

அன்பார்ந்த ஐயா,

ஒதுக்குநிதித் தேவைகள்–பிரமாணங்கள் 'D' & 'G'

1. 1961, மாசி முதலாம் திகதி அதிவிசேட இலங்கை அரசாங்க வர்த்தமானி, இலக்கம் 12280ல் வெளியிடப்பட்ட 'G' பிரமாணத்தையும், 1950, ஆவணி 28ம் திகதி வர்த்தமானி இலக்கம் 10143ல் வெளியிடப்பட்ட, காலத்திற்குக் காலம் திருத்தப்பட்ட 'D' பிரமாணத்தையும், திருத்தம் செய்கின்ற 1961, ஆடி 21ம் திகதி அதிவிசேட இலங்கை அரசாங்க வர்த்தமானியில் காணப்படும் அறிவிப்புகள் தங்கள் கவனத்திற்குக் கொண்டு வரப்படுகின்றன. இவ்வறிவுப்புகளின் பிரதிகள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

2. ''ஒதுக்கவேண்டிய நிதியில்'' ஒரு பகுதியை மகாவங்கியில் வைக்கப்படும் ரூபாய் வைப்புக்கள் வடிவத்திலும், மற்றப் பகுதியை சொத்துக்களாக வைத்திருக்கும் நாணயத்தாள், நாணயம் ஆகிய வடிவத்திலும் நிலைநாட்டத் தங்கள் வங்கி தீர்மானிக்கும் பட்சத்தில், வேறு அறிவித்தல் கொடுக்கப்படும் வரை, ஒதுக்கவேண்டிய நிதிகளில் 50 சதவீதத்திற்கு மேற்படாதவற்றை நாணயத்தாள், நாணயம் ஆகிய வடிவத்திலும், மீதியை மகா வங்கியில் வைக்கப்படும் ரூபாய் வைப்புக்கள் வடிவத்திலும் நிலைநாட்டலாம். ''நாணயத்தாள் நாணயம்,'' என்பது இச்சந்தர்ப்பத்தில், 1961ம் ஆண்டு பங்குனி மாதம் 15ம் திகதி தொழில் முடிவில் இருந்த தங்கள் வங்கியின் நாணயம், நாணயத்தாள் ஆகிய உடமைகளுக்கு மேலதிகமாக, இந்த உடமைகளில் ஏற்பட்ட அதிகரிப்புகளை மட்டுமே கருதும்.

3. மேலேயுள்ள பந்தியின் நியமங்களுக்கேற்ப எந்த நாளிலாவது ஒதுக்கவேண்டிய நிதியில் ஒரு பகுதியை நாணயத்தாள், நாணயம் ஆகிய வடிவத்தில் தங்கள் வங்கி வைத்திருந்தால், அந்த நாள் தொழில் முடிவில் இருக்கும் வங்கியின் நாணயத்தாள், நாணயம் ஆகிய உடமைகள், 1961, பங்குனி 15ம் திகதி தொழில் முடிவில் இருந்த மேற்படி உடமைகளிலிருந்து எவ்வளவு தொகையால் அதிகரித்துள்ளன என்பதைக்காட்டும் திரட்டை மகா வங்கியின் பிரதம கணக்காளருக்கு அடுத்த வேலை நாள் நண்பகல் 12 மணிக்குப் பிற்படாது கிடைக்கும்படியாக அனுப்பிவைத்தல் வேண்டும்.

தங்கள் உண்மையுள்ள,

எஸ். டி. அமரசிங்க,
பிரதம கணக்காளர்.

டபிள்யூ. தென்னக்கோன்,
உப-ஆட்சியாளர்.

## (இ) (i) 1949ம் ஆண்டின் 58ம் இலக்க நாணயவிதி அதிகாரச்சட்டம்

1954ம் ஆண்டின் 33ம் இலக்க நாணய அதிகாரச் சட்டத்தினால் திருத்தப்பட்டபடியுள்ள 1949ம் ஆண்டின் 58ம் இலக்க நாணய விதி அதிகாரச் சட்டத்தின் 10 (இ)ம், 92ம், 93ம், 95ம், 96ம் பிரிவுகளின்கீழ், மகாவங்கியின் நாணயச் சபை ஏற்படுத்திய பிரமாணம்.

டி. டபிள்யூ. இராஜபத்திரன,
ஆட்சியாளர்,
இலங்கை மகாவங்கி.

கொழும்பு, 1961 ஆடி 21.

### பிரமாணம்

மகாவங்கியின் நாணயச்சபை ஏற்படுத்தி, 1950ம் ஆண்டு ஆவணி 28ம் திகதி வர்த்தமானி இலக்கம் 10143ல் வெளியிடப்பட்டுப் பின்னர் காலத்திற்குக் காலம் திருத்தப்பட்டபடியுள்ள ''D'' பிரமாணம், இத்தால் மேலும் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(i) அந்தப் பிரமாணத்தின் 1ம் பந்தியை, 1ம் பந்தியின் உபபந்தி (1) என இலக்கமிடுவதன் மூலம்;

(ii) மேற்காட்டியவாறு இலக்கமிடப்பட்ட உபபந்தி (1)ல் ''மகாவங்கியில் வைக்கப்படும் ரூபாய் வைப்புக்கள் வடிவத்தை உடையதாக இருத்தல் வேண்டும்'' என்ற சொற்களுக்குப் பதிலாக ''வேண்டும்'' என்ற சொல்லை இடுவதன் மூலம்;

(iii) பின்வரும் உபபந்தியை, உபபந்தி (1)க்குப் பின்னர் இடுவதன் மூலம்;

''2 (அ) இப்பந்தியின் உபபந்தி (1)க்கிணங்க ஓர் வர்த்தக வங்கி நிலை நாட்ட வேண்டிய ஒதுக்குநிதிகள், மகாவங்கியில் வைக்கப்படும் ரூபாய் வைப்புக்கள் வடிவத்தில், அல்லது ஒரு பகுதி இந்த ரூபாய் வைப்புக்கள் வடிவத்திலும், மற்றப்பகுதி இத்தகைய வங்கி தன் சொத்துக்களாக வைத்திருக்கும் இலங்கை நாணயத்தாள், நாணயம் ஆகிய வடிவத்திலும் இருத்தல் வேண்டும்.

(ஆ) ஒதுக்கவேண்டிய நிதிகளில் ஒரு பகுதியை மகாவங்கியில் வைக்கப்படும் ரூபாய் வைப்புக்கள் வடிவத்திலும், மற்றப் பகுதியைத் தன் சொத்துக்களாக வைத்திருக்கும் இலங்கை நாணயத்தாள், நாணயம் ஆகிய வடிவத்திலும் நிலைநாட்ட ஒரு வர்த்தக வங்கி தீர்மானித்தால், மேற்படி ஒதுக்கு நிதிகளில் மகாவங்கியில் வைக்கப்படும் ரூபாய் வைப்புக்கள் வடிவத்தில் இருக்கக்கூடிய பகுதி எவ்வளவு என்பதையும், அதன் சொத்துக்களாக இருக்கும் இலங்கை நாணயத்தாள், நாணயம் ஆகிய வடிவத்தில் இருக்கக்கூடிய பகுதி எவ்வளவு என்பதையும், நாணயச்சபை காலத்திற்கு காலம் நிர்ணயித்து, அவ்வங்கிக்கு எழுத்துமூலம் முறையாக அறிவிக்கப்படும்;''

(iv) இப்பிரமாணத்திற்காக உள்ள பட்டோலையில், ''மகாவங்கியில் வைப்புக்களாக இருக்கவேண்டிய ஒதுக்குநிதிகள்'' என்ற சொற்களுக்குப் பதிலாக ''ஒதுக்கவேண்டிய நிதிகள்'' என்ற சொற்களை இடுவதன் மூலம்;

## (இ) (ii) 1959ம் ஆண்டின் 58ம் இலக்க நாணயவிதி அதிகாரச்சட்டம்

1954ம் ஆண்டின் 33ம் இலக்க நாணய விதி அதிகாரச் சட்டத்தினுல் திருத்தப் பட்டபடியுள்ள 1949ம் ஆண்டின் 58ம் இலக்க நாணய விதி அதிகாரச் சட்டத்தின் 10 (இ)ம், 92ம், 93ம், 94ம், 95ம், 96ம் பிரிவுகளின்கீழ் மகாவங்கியின் நாணயச்சபை ஏற்படுத்திய பிரமாணம்.

டி. டபிள்யூ. இராஜபத்திரன,
ஆட்சியாளர்,
இலங்கை மகாவங்கி,

கொழும்பு, ஆடி 21.

### பிரமாணம்

மகாவங்கியின் நாணயச்சபை ஏற்படுத்தி, 1961ம் ஆண்டு மாசி முதலாம் திகதி அதிவிசேட வர்த்தமானி இலக்கம் 12280ல் வெளியிடப்பட்ட "G" பிரமாணம், இத் தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(i) 2ம் பந்திக்குப் பதிலாகப் பின்வரும் புதிய பந்தியை இடுவதன் மூலம்:-
"2. விசேட ஒதுக்குநிதியின் தொகை, முதலாம் பந்தியில் குறிக்கப்பட்ட அதிகரிப்புக்களில் முப்பத்தியெட்டுச் சதவீதத்திற்குச் சமமாக இருத்தல் வேண்டும்."

(ii) 2ம் பந்திக்குப் பின்னர் பின்வரும் புதிய பந்தியை இடுவதன் மூலம்:-

"2 அ. (1) முதலாம் பந்திக்கிணங்க ஓர் வர்த்தக வங்கி நிலைநாட்டவேண் டிய விசேட ஒதுக்குநிதிகள், மகாவங்கியில் வைக்கப்படும் ரூபாய் வைப்புக் கள் வடிவத்தில், அல்லது ஒரு பகுதி இந்த ரூபாய் வைப்புக்கள் வடிவத்தி லும், மற்றப்பகுதி இத்தகைய வங்கி தன் சொத்துக்களாக வைத்திருக்கும் இலங்கை நாணயத்தாள், நாணயம் ஆகிய வடிவத்திலும் இருத்தல் வேண் டும்.

(2) ஒதுக்கவேண்டிய விசேட நிதிகளில் ஒருபகுதியை மகாவங்கியில் வைக் கப்படும் ரூபாய் வைப்புக்கள் வடிவத்திலும், மற்றப் பகுதியை தன் சொத் துக்களாக வைத்திருக்கும் இலங்கை நாணயத்தாள், நாணயம் ஆகிய வடி வத்திலும் நிலைநாட்ட ஓர் வர்த்தக வங்கி தீர்மானித்தால், மேற்படி ஒதுக்கு நிதிகளில் மகாவங்கியில் வைக்கப்படும் ரூபாய் வைப்புக்கள் வடி வத்தில் இருக்கக்கூடிய பகுதி எவ்வளவு என்பதையும், அதன் சொத்துக் களாக இருக்கும் இலங்கை நாணயத்தாள், நாணயம் ஆகிய வடிவத்தில் இருக்கக்கூடிய பகுதி எவ்வளவு என்பதையும், நாணயச் சபை காலத்திற் குக் காலம் நிர்ணயித்து, அவ்வங்கிக்கு எழுத்துமூலம் முறையாக அறி விக்கப்படும்;"

(iii) இப்பிரமாணத்தின் 3ம் பந்தியில் " 'D' பிரமாணத்தின்கீழ் மகாவங்கியில்" என்ற சொற்களுக்குப் பதிலாக " 'D' பிரமாணத்தின் கீழ்" என்ற சொற் களை இடுவதன் மூலம்.

**(ச) சுற்றறிக்கை இலக்கம் 15**

இலங்கை மகாவங்கி,
த. பெ. இலக்கம் 590,
கொழும்பு 1.
1961, ஆவணி, 1.

**கூட்டுறவுச் சங்கங்களின் வழங்குதவணை வாக்குறிதிப்பத்திரங்களின் அடைமானத்திற்கெதிராக உள்ள மகாவங்கியின் வட்டி விகிதம்**

உள்நாட்டு விவசாய உற்பத்திகளின் கொள்வனவு, விற்பனவு, அல்லது களஞ்சியப்படுத்தலின் விளைவாக உண்டாகும் (கூட்டுறவுச்சங்கக் கட்டளைச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட) கூட்டுறவுச்சங்கங்களினது வழங்கு தவணை வாக்குறிதிப்பத்திரங்களை அடைமானமாக வைத்து வர்த்தக வங்கிகள் மகாவங்கியிடமிருந்து பெறும் முற்பணங்களின் பேரில் ஓராண்டுக்கான வட்டி விகிதம், இன்று தொடக்கம் 3 சதவீதமாக இருக்கும்.

எஸ். டி. அமரசிங்க,
*பிரதம கணக்காளர்*
*இலங்கை மகாவங்கி.*

டி. டபிள்யூ. இராஜபத்திரன,
*ஆட்சியாளர்*
*இலங்கை மகாவங்கி.*

(உ) சுற்றறிக்கைக் கடிதம் இலக்கம் 16

இலங்கை மகாவங்கி,
த. பெ. இலக்கம் 590,
கொழும்பு 1.
1961 புரட்டாதி 25.

ஒதுக்குநிதித் தேவைகள்–பிரமாணங்கள் 'D' & 'G'

மேற்கோள்:– 1961 ஆடி 24ம் திகதி 14ம் இலக்கச் சுற்றறிக்கைக் கடிதத்தின் 2ம் பந்தி.

இன்று தொடக்கம் ஒதுக்க வேண்டிய நிதிகளில் 75 சதவீதத்திற்கு மேற்படாதனவற்றை நாணயத்தாள், நாணயம் ஆகிய வடிவத்திலும், மீதியை மகாவங்கியில் வைக்கப்படும் ரூபாய் வைப்புக்கள் வடிவத்திலும் வர்த்தக வங்கிகள் நிலைநாட்டலாமென இவ்வங்கிகள் இத்தால் அறிவிக்கப்படுகின்றன. ''நாணயத்தாள், நாணயம்'' என்பது இச்சந்தர்ப்பத்தில், 1961ம் ஆண்டு பங்குனி மாதம் 15ம் திகதி தொழில் முடிவில் இருந்த வங்கியின் நாணயத்தாள், நாணயம் ஆகிய உடைமைகளுக்கு மேலதிகமாக, இந்த உடைமைகளில் ஏற்பட்ட அதிகரிப்புக்களை மட்டுமே கருதும்.

தங்கள் உண்மையுள்ள

எஸ். டி. அமரசிங்க,
பிரதம கணக்காளர்.

டபிள்யூ தென்னக்கோன்,
உப ஆட்சியாளர்.

(ஊ) அமெரிக்க டொலர்களுக்கான மகாவங்கியின் நாணயமாற்று விகிதங்கள்

| திகதி | சுற்றறிக்கை இலக்கம் | | வாங்கல் ($ 100க்கு | விற்றல் ($ 100க்கு) |
|---|---|---|---|---|
| 2.1.61 | 1/153 | தலப்பரிமாறல்<br>மூன்று மாதங்கள்வரை எதிர்காலப் பரிமாறல் | ரூ. 475·00<br>ரூ. 475.00 | ரூ. 474·75<br>தல ஒப்படைப்புக்கு மேலே ஒருமாதக் கட்டணம் –/25 |
| 11.1.61 | 1/154 | தலப்பரிமாறல்<br>மூன்று மாதங்கள்வரை எதிர்காலப் பரிமாறல் | ரூ. 474·50<br>ரூ. 474·50 | ரூ. 475·25<br>தல ஒப்படைப்புக்கு மேலே ஒருமாதக் கட்டணம் –/25 |
| 2.2.61 | 1/155 | தலப்பரிமாறல்<br>மூன்று மாதங்கள்வரை எதிர்காலப் பரிமாறல் | ரூ. 475·00<br>ரூ. 475·00 | ரூ. 475·25<br>தல ஒப்படைப்புக்குமேலே ஒருமாதக் கட்டணம் –/25 |
| 10.2.61 | 1/156 | தலப்பரிமாறல்<br>மூன்று மாதங்கள்வரை எதிர்காலப் பரிமாறல் | ரூ. 475·25<br>ரூ. 475·25 | ரூ. 475·50<br>தல ஒப்படைப்புக்குமேலே ஒருமாதக் கட்டணம் –/25 |
| 17.2.61 | 1/157 | தலப்பரிமாறல்<br>மூன்று மாதங்கள்வரை எதிர்காலப் பரிமாறல் | ரூ. 475·75<br>ரூ. 475·75 | ரூ. 476·00<br>தல ஒப்படைப்புக்கு மேலே ஒருமாதக் கட்டணம் –/25 |
| 27.2.61 | 1/158 | தலப்பரிமாறல்<br>மூன்று மாதங்கள்வரை எதிர்காலப் பரிமாறல் | ரூ. 476·25<br>ரூ. 476·25 | ரூ. 476·50<br>தல ஒப்படைப்புக்கு மேலே ஒருமாதக் கட்டணம் –/25 |
| 7.3.61 | 1/159 | தலப்பரிமாறல்<br>மூன்று மாதங்கள்வரை எதிர்காலப் பரிமாறல் | ரூ. 476·75<br>ரூ. 476·75 | ரூ. 477·00<br>தல ஒப்படைப்புக்குமேலே ஒருமாதக் கட்டணம் –/25 |
| 10.3.61 | 1/160 | தலப்பரிமாறல்<br>மூன்று மாதங்கள்வரை எதிர்காலப் பரிமாறல் | ரூ. 476·00<br>ரூ. 476·00 | ரூ. 476·25<br>தல ஒப்படைப்புக்குமேலே ஒருமாதக் கட்டணம் –/25 |
| 22.3.61 | 1/161 | தலப்பரிமாறல்<br>மூன்று மாதங்கள்வரை எதிர்காலப் பரிமாறல் | ரூ. 476·25<br>ரூ. 476·25 | ரூ. 476·50<br>தல ஒப்படைப்புக்குமேலே ஒருமாதக் கட்டணம் –/25 |
| 27.3.61 | 1/162 | தலப்பரிமாறல்<br>மூன்று மாதங்கள்வரை எதிர்காலப் பரிமாறல் | ரூ. 476·50<br>ரூ. 476·50 | ரூ 476·75<br>தல ஒப்படைப்புக்குமேலே ஒருமாதக் கட்டணம் –/25 |
| 11.4.61 | 1/163 | தலப்பரிமாறல்<br>மூன்று மாதங்கள்வரை எதிர்காலப் பரிமாறல் | ரூ. 476·00<br>ரூ. 476·00 | ரூ. 476·25<br>தல ஒப்படைப்புக்குமேலே ஒருமாதக் கட்டணம் –/25 |
| 3.5.61 | 1/164 | தலப்பரிமாறல்<br>மூன்று மாதங்கள்வரை எதிர்காலப் பரிமாறல் | ரூ. 476·50<br>ரூ. 476·50 | ரூ. 476·75<br>தல ஒப்படைப்புக்குமேலே ஒருமாதக் கட்டணம் –/25 |
| 16.5.61 | 1/165 | தலப்பரிமாறல்<br>மூன்று மாதங்கள்வரை எதிர்காலப் பரிமாறல் | ரூ. 476·75<br>ரூ. 476·75 | ரூ. 477·00<br>தல ஒப்படைப்புக்குமேலே ஒருமாதக் கட்டணம் –/25 |
| 29.5.61 | 1/166 | தலப்பரிமாறல்<br>மூன்று மாதங்கள்வரை எதிர்காலப் பரிமாறல் | ரூ. 477·25<br>ரூ. 477·25 | ரூ. 477·50<br>தல ஒப்படைப்புக்குமேலே ஒருமாதக் கட்டணம் –/25 |
| 7.6.61 | 1/167 | தலப்பரிமாறல்<br>மூன்று மாதங்கள்வரை எதிர்காலப் பரிமாறல் | ரூ. 477·50<br>ரூ. 477·50 | ரூ. 477·75<br>தல ஒப்படைப்பக்குமேலே ஒருமாதக் கட்டணம் –/25 |
| 13.6.61 | 1/168 | தலப்பரிமாறல்<br>மூன்று மாதங்கள்வரை எதிர்காலப் பரிமாறல் | ரூ. 477·75<br>ரூ. 477·75 | ரூ. 478·00<br>தல ஒப்படைப்புக்குமேலே ஒருமாதக் கட்டணம் –/25 |

(ஊ) அமெரிக்க டொலர்களுக்கான மகாவங்கியின் நாணயமாற்று விகிதங்கள்

| திகதி | சுற்றறிக்கை இலக்கம் | | வாங்கல் ($ 100க்கு) | விற்றல் ($ 100க்கு) |
|---|---|---|---|---|
| 26.6.61 | 1/169 | தலப்பரிமாறல் | ரூ. 478·00 | ரூ. 478·25 |
| | | மூன்று மாதங்கள்வரை எதிர்காலப் பரிமாறல் | ரூ. 478·00 | தலஒப்படைப்புக்கு மேலே ஒருமாதக் கட்டணம் –/25 |
| 7.7.61 | 1/170 | தலப்பரிமாறல் | ரூ. 478·25 | ரூ. 478·50 |
| | | மூன்று மாதங்கள்வரை எதிர்காலப் பரிமாறல் | ரூ. 478·25 | தல ஒப்படைப்புக்குமேலே ஒருமாதக் கட்டணம் –/25 |
| 28.7.61 | 1/171 | தலப்பரிமாறல் | ரூ. 477·75 | ரூ. 478·00 |
| | | மூன்று மாதங்கள்வரை எதிர்காலப் பரிமாறல் | ரூ. 477·75 | தல ஒப்படைப்புக்கு மேலே ஒருமாதக் கட்டணம் –/25 |
| 3.8.61 | 1/172 | தலப்பரிமாறல் | ரூ. 477·00 | ரூ. 477·25 |
| | | மூன்று மாதங்கள்வரை எதிர்காலப் பரிமாறல் | ரூ. 477·00 | தல ஒப்படைப்புக்கு மேலே ஒருமாதக் கட்டணம் –/25 |
| 7.8.61 | 1/173 | தலப்பரிமாறல் | ரூ. 476·25 | ரூ. 476·50 |
| | | மூன்று மாதங்கள்வரை எதிர்காலப் பரிமாறல் | ரூ. 476·25 | தல ஒப்படைப்புக்குமேலே ஒருமாதக் கட்டணம் –/25 |
| 30.8.61 | 1/174 | தலப்பரிமாறல் | ரூ. 475·75 | ரூ. 476·00 |
| | | மூன்று மாதங்கள்வரை எதிர்காலப் பரிமாறல் | ரூ. 475·75 | தல ஒப்படைப்புக்குமேலே ஒருமாதக் கட்டணம் –/25 |
| 6.9.61 | 1/175 | தலப்பரிமாறல் | ரூ. 475·00 | ரூ. 475·25 |
| | | மூன்று மாதங்கள்வரை எதிர்காலப் பரிமாறல் | ரூ. 475·00 | தல ஒப்படைப்புக்குமேலே ஒருமாதக் கட்டணம் –/25 |
| 19.9.61 | 1/176 | தலப்பரிமாறல் | ரூ. 474·50 | ரூ. 474·75 |
| | | மூன்று மாதங்கள்வரை எதிர்காலப் பரிமாறல் | ரூ. 474·50 | தல ஒப்படைப்புக்குமேலே ஒருமாதக் கட்டணம் –/25 |
| 2.10.61 | 1/177 | தலப்பரிமாறல் | ரூ. 474·25 | ரூ. 474·50 |
| | | மூன்று மாதங்கள்வரை எதிர்காலப் பரிமாறல் | ரூ. 474·25 | தல ஒப்படைப்புக்குமேலே ஒருமாதக் கட்டணம் –/25 |
| 11.10.61 | 1/178 | தலப்பரிமாறல் | ரூ. 474·00 | ரூ. 474·25 |
| | | மூன்று மாதங்கள்வரை எதிர்காலப் பரிமாறல் | ரூ. 474·00 | தல ஒப்படைப்புக்குமேலே ஒருமாதக் கட்டணம் –/25 |
| 25.10.61 | 1/179 | தலப்பரிமாறல் | ரூ. 473 85 | ரூ 474·10 |
| | | மூன்று மாதங்கள்வரை எதிர்காலப் பரிமாறல் | ரூ. 473·85 | தல ஒப்படைப்புக்குமேலே ஒருமாதக் கட்டணம் –/25 |
| 9.11.61 | 1/180 | தலப்பரிமாறல் | ரூ. 474·00 | ரூ. 474·25 |
| | | மூன்று மாதங்கள்வரை எதிர்காலப் பரிமாறல் | ரூ. 474·00 | தல ஒப்படைப்புக்குமேலே ஒருமாதக் கட்டணம் –/25 |
| 20.11.61 | 1/181 | தலப்பரிமாறல் | ரூ. 473·85 | ரூ. 474·10 |
| | | மூன்று மாதங்கள்வரை எதிர்காலப் பரிமாறல் | ரூ. 473·85 | தல ஒப்படைப்புக்கு மேலே ஒருமாதக் கட்டணம் –/25 |
| 4.12.61 | 1/182 | தலப்பரிமாறல் | ரூ. 474·75 | ரூ. 475·00 |
| | | மூன்று மாதங்கள்வரை எதிர்காலப் பரிமாறல் | ரூ. 474·75 | தல ஒப்படைப்புக்கு மேலே ஒருமாதக் கட்டணம் –/25 |
| 8.12.61 | 1/183 | தலப்பரிமாறல் | ரூ. 474·50 | ரூ. 474·75 |
| | | மூன்று மாதங்கள்வரை எதிர்காலப் பரிமாறல் | ரூ. 474·50 | தல ஒப்படைப்புக்கு மேலே ஒருமாதக் கட்டணம் –/25 |
| 22.12.61 | 1/184 | தலப்பரிமாறல் | ரூ. 475·25 | ரூ. 475·50 |
| | | மூன்று மாதங்கள்வரை எதிர்காலப் பரிமாறல் | ரூ. 475·25 | தல ஒப்படைப்புக்குமேலே ஒருமாதக் கட்டணம் –/25 |